FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8364135

1. District : மாவட்டம் இராமநாதபுரம் PS: காவல்நிலையம் ஊரகம் பிரிவு Year: ஆண்டு FIR No.: முத.அ. எண் 01/26 Date: நாள் 19.06.2026

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனை சட்டம் Sections பிரிவுகள்: 7 of PC Amendment Act - 2018

(ii) Act சட்டம்: ஊதல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: ஊதல் தடுப்புச் சட்டம் திருத்தம் 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 18.06.2026 மதியம் 12.00 மணி முதல் 19.06.2026 அதிகாலை 02.00

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 19.06.2026 at 06.00 hrs காலை

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL - 1 Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 38.கி.மீ மேற்கு

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தினுள் வாகனங்களை ஆய்வு செய்யும் இடம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. இராமச்சந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முருகேசன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/2026 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனியார் நிறுவன ஊழியர் (g) Address : முகவரி தலைமை தபால் தந்தி அலுவலகம் அருகில் ஊதல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு இராமநாதபுரம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

காலம் 12 ல் குறிப்பிடப்படவில்லை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் ஏதுமில்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரிகளின் விபரம்:-

1) திரு.மதங்கராஜ், வயது 59/2026, த/பெ மன்னாதன், மோட்டார் வாகன ஆய்வாளர், இராமநாதபுரம் (பொ) பரமக்குடி.

2) திரு.திலீப்குமார், வயது 29/2026, த/பெ சவுந்திரபாண்டியன், Registration Staff, PON SUZUKI, இராமநாதபுரம்.

3) திரு.கதிரவன், வயது 32/2026, த/பெ மாரி, மேனேஜர், கணபதி செட்டியார் CBSE பள்ளி, பரமக்குடி.

4) திரு.முகம்மது ஜமீல் ராஜா, வயது 33/2026, த/பெ நூர் முகம்மது, உரிமையாளர், Friends டிரைவிங் ஸ்கூல், பார்த்திபனூர்.

5) திரு.அப்துல் ரகுமான், வயது 37/2026, த/பெ சாகுல் ஹமீது, பயிற்றுநர், கனி டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி.

6) திரு.தட்சிணாமூர்த்தி, வயது 39/2026, த/பெ முனியசாமி, பணியாளர், ஹமீதியா டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி.

7) திரு.தனபாலன், வயது 52/2026, த/பெ ராஜேந்திரன், புரோக்கர்.

8) திரு.வேல்முருகன், வயது 37/2026, த/பெ சந்திரன், ஏஜெண்ட், சோழா இன்சூரன்ஸ், பரமக்குடி.

9) திரு.கமல்ராஜ், வயது 33/2026, த/பெ மாணிக்கம், சேல்ஸ்மேன், பஜாஜ் டுவீலர் கம்பெனி, பரமக்குடி.

10) திரு.ராஜா, வயது 41/2026, த/பெ காந்தி, உரிமையாளர், முத்து டிரைவிங் ஸ்கூல், கமுதி.

11) திரு.பிரசாந்த், வயது 33/2026, த/பெ ராஜேந்திரன், Registration Staff, RK Motors, Bajaj Auto Dealer, இராமநாதபுரம்.

12) திரு.உமேஷ், வயது 24/2026, த/பெ.சண்முகவேலு, பணியாளர், இ சேவை மையம், RTO ஆபீஸ் அருகில், பரமக்குடி.

13) திரு.அங்கமுத்து, வயது 28/2026, த/பெ ஆறுமுகம், பணியாளர், நாகராஜ் டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி.

14) திரு.சிக்கந்தர் அஸ்லாம், வயது 33/2026, த/பெ அப்துல்கனி, பணியாளர், முத்து டிரைவிங் ஸ்கூல், கமுதி.

15) திரு.ரியாசுதீன், உரிமையாளர், ஹமீதியா டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் தலைமை காவலர் இராஜேஸ்வரி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ஒன்றாவது பிரிவு, இராமநாதபுரம் நகர் காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.06.2026 at 18.00 hrs

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.04/2026 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

சமர்ப்பிக்கிறேன் - இன்று 19.06.2026ம் தேதி காலை 06.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல்துணை கண்காணிப்பாளர் திரு.மு.இராமச்சந்திரன் அவர்கள் 18.06.2026ம் தேதி மதியம் 12.00 மணி முதல் 19.06.2026ம் தேதி காலை 02.00 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் உள்ள பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் வாகனங்களை ஆய்வு செய்யும் இடத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை சம்பந்தமான அறிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,92,650/- ஆகியவற்றுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 04/2026 பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 ன்படி 19.06.2026 ம் தேதி காலை 07.00 மணிக்கு வழக்குபதிவு செய்தேன். வாதியின் புகார் பின்வருமாறு:- அனுப்புநர் திரு.மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். பெறுநர் திரு.மு.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். அய்யா, பொருள்:- திடீர் சோதனை - 18.06.2026ம் தேதி மதியம் 12.00 மணிமுதல் 19.06.2026ம் தேதி அதிகாலை 02.00 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் உள்ள பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் வாகனங்களை ஆய்வு செய்யும் இடத்தில் திடீர் சோதனை நடத்தப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தொடர்பாக. பார்வை:- எனது திடீர் சோதனை அறிக்கை, நாள் 19.06.2026. இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவிற்கு 18.06.2026ம் தேதியன்று இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் (பொ) பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தினுள் வாகனங்களை ஆய்வு செய்யும் இடத்தில் வைத்து பொதுமக்களிடமிருந்து டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலமாக லஞ்சமாக பணம் பெற்றுக்கொண்டு வாகனங்களை ஆய்வு செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், 18.06.2026ம் தேதி மதியம் 12.00 மணிக்கு செயல்முறை நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் முன்னிலையில் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தினுள் பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் வாகனங்களை

ஆய்வு செய்யும் இடத்திற்கு சென்று அங்கிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் என்பவரிடம் அடையாள அட்டைகளை காண்பித்து திடீர் சோதனை விபரத்தைக்கூறி திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடமானது பரமக்குடி - இராமநாதபுரம் செல்லும் சாலையில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பிரதான நுழைவு வாசலின் மேற்கே வடக்கு பார்த்தவாறு நுழைவு வாசல் உள்ளது. மேற்படி இடத்தில் உள்ள அலுவலர்கள் மற்றும் நபர்கள் ஓட முயற்சி செய்தவர்களை சுற்றி வளைத்து வெளியே செல்லாமலும் வெளியில் இருந்து யாரும் மேற்படி இடத்திற்குள் உள்ளே வராமல் இருக்கும் வண்ணம் கண்காணிக்க என்னுடன் வந்த போலீஸ் பார்ட்டியினரை நியமித்தேன். மேற்படி இடத்தில் பணியில் இருந்த திரு.தங்கராஜ், இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்ட பின்னர் அரசு சாட்சி திரு.மணிகண்டன் முன்னிலையில் சோதனை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்த சிவப்பு நிற டீசர்ட் அணிந்திருந்த ஒரு நபர் பணத்தையும், பள்ளி இலவச சோல்டர் பேக்கையும் போட்டுவிட்டு தெற்கு நோக்கி வேகமாக ஓடி சென்றார். மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.5,000/- (Rs.500x10) இருந்தது. மேற்படி பணம் ரூ.5,000/- வழக்கின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் விட்டுச்சென்ற பள்ளி இலவச சோல்டர் பேக்கை சோதனையிட மேற்படி பேக்கில் வாகன ஆய்வு சம்மந்தமான ஆவணங்கள் காணப்பட்டது. மேற்படி ஆவணங்கள் மேல்நடவடிக்கைக்காக மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சோதனையின்போது, மேற்படி வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ், வயது 59/2026, த/பெ மன்னாதன், இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை - 1 (பொ) பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் என்பவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.250/-ஐ எடுத்து ஆஜர் செய்தவரிடம் மேற்படி பணம் குறித்து விசாரிக்க அப்பணம் அவரது கைச்செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். எனவே அப்பணம் ரூ.250/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின் அவர் அமர்ந்திருந்த மேஜையினை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கு இடமான ஏதும் கிடைக்கப் பெறவில்லை. மேலும் அவரது அரசு வாகனம் TN 65 G 0756 Bolero என்ற நான்கு சக்கர வாகனத்தை அரசு சாட்சி முன்னிலையில் சோதனை செய்ததில் அதில் பணம் ஏதும் இல்லை. மேலும் அவரது அலைபேசி எண் விபரம் கேட்க 94432 42556 என்று கூறியவரிடம், மேற்படி எண்ணிற்கு போன்பே, ஜீபே உள்ளதா என்று விபரம் கேட்க இல்லை என்று கூறினார்.

எனவே அவரது அலைபேசியை வாங்கி சோதனை செய்துவிட்டு அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் தான் கடந்த 04.08.2025ம் தேதி முதல் இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை – 1 ஆக பணிக்கு அறிக்கை செய்து அன்றைய தேதியிலிருந்து பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் கூடுதல் பொறுப்பு வகித்து வருவதாகவும் கூறினார். மேலும் தனக்கு ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் SBI கிளை வங்கியில் சம்பள கணக்கு வைத்திருப்பதாகவும், இதைத்தவிர தனது பெயரிலும், தனது மனைவி மற்றும் குழந்தைகள் பெயரிலும் வேறு எந்த வங்கியிலும் கணக்கு இல்லையென்றும் கூறினார். பின்னர் டிரைவிங் ஸ்கூலில் பணிபுரியும் நபர்கள் மற்றும் புரோக்கர்களின் அலைபேசி ஜீபே மற்றும் போன்பே பரிவர்த்தனை விபரங்களை ஆராய்ந்ததில் 8778079763 மற்றும் 9487959557 ஆகிய அலைபேசி எண்களுக்கு அதிகப்படியான பண பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளது தெரிய வந்தது. மேற்படி அலைபேசி எண்கள் குறித்து விசாரித்திதில், முதலில் அப்படி ஏதும் இல்லை எனக்கூறியவர் பின்னர் விசாரித்த போது 8778079763 என்ற எண்ணானது அவரது மகன் ஹர்ஷவர்தனின் அலைபேசி எண் என்றும், 9487959557 என்ற எண்ணானது அவரது மகள் ஹர்ஷினியின் அலைபேசி எண் எனக்கூறினார். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.திலீப் குமார், வயது 29/2026, த/பெ சவுந்திரபாண்டியன், Registration Staff, PON SUZUKI, இராமநாதபுரம் என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மணிப்பர்சில் ரூபாய் 7,700/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முதலில் முன்னுக்கு பின் முரணாக கூறி பின் தனது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.7,700/-ஐ கைப்பற்றினேன். மேலும் அவரது சோல்டர் பேக்கில் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அந்த சோல்டர் பேக்கை அரசு சாட்சி முன்னிலையில் சோதனை செய்ய அதில் ரூபாய் 1,32,890/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறியதால் மேற்படி பணம் ரூ.1,32,890/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.கதிரவன், வயது 32/2026, த/பெ மாரி, மேனேஜர், கணபதி செட்டியார் CBSE பள்ளி, முதுகுளத்தூர் ரோடு, பரமக்குடி என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, மேற்படி பள்ளியின் புதிய வண்டியினை பதிவு செய்வதற்காக தாளாளர் புகைப்படத்தை ஹமீதியா டிரைவிங் ஸ்கூலில் பணிபுரியும் தட்சிணாமூர்த்தி என்பவரிடம் கொடுப்பதற்காக வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது மேல்பாக்கெட்டில் ரூபாய் 3,100/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முதலில் முன்னுக்கு பின் முரணாக கூறி பின் தனது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.3,100/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.முகம்மது ஜமீல் ராஜா, வயது 33/2026, த/பெ நூர் முகம்மது, உரிமையாளர், Friends டிரைவிங் ஸ்கூல், பார்த்திபனூர் என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, தனது நண்பர் இளங்குமரன் என்பவரது டிரைவிங் ஸ்கூல் லைசன்ஸ் புதுப்பித்தல் சம்பந்தமாக விபரம் கேட்க மோட்டார் வாகன ஆய்வாளரை சந்திக்க அவருடன் வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது மேல்பாக்கெட்டில் ரூபாய் 570/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முதலில் முன்னுக்கு பின் முரணாக கூறி பின் தனது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.570/-ஐ கைப்பற்றினேன். மேலும் அவரது சம்மதத்துடன் அவரது அலைபேசியின் ஜீபேயினை (9787343400) ஆய்வு செய்ததில், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களின் மகன் (8778079763) பெயரில் உள்ள ஜீபே கணக்கிற்கு கணிசமான தொகை அனுப்பியுள்ள விபரம் தெரிய வந்தது. அது குறித்து அவரிடம் விசாரித்தபோது, வழக்கமான மாமூல் தொகையை வசூலித்து சில நேரங்களில் கையிலும், சில நேரங்களில் ஜீபே மூலமாகவும் அவர் கூறும் வங்கி கணக்கிற்கு செலுத்துவேன் எனக்கூறினார். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு

செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.அப்துல் ரகுமான், வயது 37/2026, த/பெ சாகுல் ஹமீது, பயிற்றுநர், கனி டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, தனது உறவினரின் வாகனத்தை FC காண்பிப்பது தொடர்பாக மோட்டார் வாகன ஆய்வாளரை சந்திக்க வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது மேல்பாக்கெட்டில் ரூபாய் 1,970/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முதலில் முன்னுக்கு பின் முரணாக கூறி பின் தனது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.1,970/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.தட்சிணாமூர்த்தி, வயது 39/2026, த/பெ முனியசாமி, ஆக்டிங் டிரைவர், ஹமீதியா டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, ஆயிரவைசிய மெட்ரிகுலேசன் பள்ளியின் பெயரில் உள்ள புதிய வண்டியை பதிவு செய்வதற்காக ஓட்டி வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது வலது பேண்ட் மேல்பாக்கெட்டில் ரூபாய் 15,220/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறியதால் மேற்படி பணம் ரூ.15,220/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.தனபாலன், வயது 52/2026, த/பெ ராஜேந்திரன், புரோக்கர் என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, தனது உறவினரின் வாகனத்தை FC காண்பிப்பது தொடர்பாக மோட்டார் வாகன ஆய்வாளரை சந்திக்க வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது மேல்பாக்கெட்டில் ரூபாய் 800/- இருந்தது. பொதுவாக அனைத்து வாகனங்களுக்கும் FC பார்ப்பதற்கு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ரூ.500/- முதல் ரூ.1,500/- வரை கொடுப்பது

வழக்கம் என்றும், தான் மேற்படி நபர்களிடம் பணம் பெறாததால் தனது கைச்செலவிற்கு வைத்திருந்த பணம் என்று கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.800/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.வேல்முருகன், வயது 37/2026, த/பெ சந்திரன், ஏஜெண்ட், சோழா இன்சூரன்ஸ், பரமக்குடி என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, தனது வாடிக்கையாளர் ஆட்டோவிற்கு இன்சூரன்ஸ் அப்டேட் செய்ய வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது இடது பின்பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 6.000/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முதலில் பணம் ஏதும் இல்லையென்று கூறியவர் பின்பு முன்னுக்கு பின் முரணாக கூறியதால் மேற்படி பணம் ரூ.6,000/-ஐ கைப்பற்றினேன். மேலும் அவாது சம்மதத்துடன் அவரது அலைபேசியின் ஜீபேயினை (9025434727) ஆய்வு செய்ததில், பரமக்குடி மோட்டார் வாகன அலுவலகத்தில் தற்காலிக ஊழியராக பணிபுரியும் ராகுல் என்ற தேவா என்ற பெயரில் உள்ள ஜீபே கணக்கிற்கு (8300774525) கணிசமான தொகை அனுப்பியுள்ள விபரம் தெரிய வந்தது. மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.கமல்ராஜ், வயது 33/2026, த/பெ மாணிக்கம், சேல்ஸ்மேன், பஜாஜ் டுவீலர் கம்பெனி, பரமக்குடி என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, தனது நிறுவன வாகனங்களின் புதிய பதிவிற்காக வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது வலது பின்பக்க பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 14.700/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, மேற்படி பணம் புதிய செல்போன் வாங்குவதற்காக வைத்திருந்ததாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.14,700/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.ராஜா, வயது 41/2026, த/பெ காந்தி, உரிமையாளர், முத்து டிரைவிங் ஸ்கூல், கமுதி

என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, தனது வாடிக்கையாளர் வேல்மயில் என்பவருக்கு பேன்சி நம்பர் வாங்கி தருவதற்கு மோட்டார் வாகன ஆய்வாளரை சந்திப்பதற்காக அவருடன் வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது இடது சட்டை பாக்கெட்டில் ரூபாய் 2,900/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறியதால் மேற்படி பணம் ரூ.2,900/-ஐ கைப்பற்றினேன். மேலும் அவரது சம்மதத்துடன் அவரது அலைபேசியின் ஜீபேயினை (9894894173) ஆய்வு செய்ததில், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களின் மகள் (9487959557) பெயரில் உள்ள ஜீபே கணக்கிற்கு சுமார் ஒரு லட்சம் வரை தொகை அனுப்பியுள்ள விபரம் தெரிய வந்தது. அது குறித்து அவரிடம் விசாரித்தபோது, வழக்கமான மாமூல் தொகையை வசூலித்து சில நேரங்களில் கையிலும், சில நேரங்களில் ஜீபே மூலமாகவும் அவர் கூறும் வங்கி கணக்கிற்கு செலுத்துவேன் எனக்கூறினார். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.பிரசாந்த், வயது 33/2026, த/பெ ராஜேந்திரன், Registration Staff, RK Motors, Bajaj Auto Dealer, இராமநாதபுரம் என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, தனது நிறுவன வாடிக்கையாளரின் வாகனப்பதிவு சம்பந்தமான ஆவணங்களை கொடுப்பதற்கு வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது இடது சட்டை பாக்கெட்டில் ரூபாய் 1,170/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறியதால் மேற்படி பணம் ரூ.1,170/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.உமேஷ், வயது 24/2026, த/பெ சண்முகவேலு, பணியாளர், இ சேவை மையம், RTO ஆபீஸ் அருகில், பரமக்குடி என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, இ சேவை மையம் மூலமாக பணம் செலுத்திய வாடிக்கையாளரின் ஆவணங்களை கொடுப்பதற்கு வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது இடது சட்டை

பாக்கெட்டில் ரூபாய் 630/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறியதால் மேற்படி பணம் ரூ.630/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்த வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் தெரிந்து கொண்ட திரு.சுப்ரமணியன், வயது 46/2026, த/பெ இராஜலிங்கம், பணியாளர், கோகுலம் டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி என்று சொன்னவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். இங்கு வந்த விபரம் குறித்து கேட்க, தனது டிரைவிங் ஸ்கூல் வாடிக்கையாளரின் பெயர் மாற்றம் மற்றும் புதிய வாகனப்பதிவிற்காக ஆவணங்களை டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் வாசுதேவராஜ் கொடுத்ததை தான் எடுத்து வந்ததாக கூறினார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது இடது சட்டை பாக்கெட்டில் ரூபாய் 100/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, அது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.100/- ஐ அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது அங்கிருந்த சில பொதுமக்களை சோதனை செய்ததில், அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு விசாரணை செய்து அவரவர் தகுந்த முகாந்திரம் கூறியதால் அப்பணமானது திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அங்கு சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்த வாகனங்களை முழுமையாக சோதனை செய்ததில் பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் மேற்படி இடமானது திடீர் சோதனை அறிக்கை தயார் செய்ய ஏதுவாக இல்லாததால் அருகிலுள்ள அரசு அலுவலகமான பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி மைய முதல்வரிடம் அனுமதி பெற்று 14.15 மணியளவில் தொழிற்பயிற்சி மையம் வந்து அங்கிருந்த அறையில் வைத்து மேற்படி நிகழ்வுகளை பின்னர் தயார் செய்யப்பட்ட சோதனை அறிக்கையில் குறிக்கப்பட்டது. மேலும் அதைத்தொடர்ந்து ஹமீதியா டிரைவிங் ஸ்கூலில் பணிபுரியும் திரு.தட்சிணாமூர்த்தி என்பவர் வைத்திருந்த ஆவணங்கள் பற்றி விசாரிக்க, மேற்படி ஆவணங்களை டிரைவிங் ஸ்கூல் நடத்தி வரும் ரியாசுதீன் என்பவர் கொடுத்து அனுப்பியதாக கூறியதன்பேரில் மேற்படி டிரைவிங் ஸ்கூலில் சந்தேககத்திற்கு இடமான ஆவணங்கள் இருக்கும் என்பதன் அடிப்படையில் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து கிளம்பி புறப்பட்டு அரசு சாட்சியுடன் 15.45 மணிக்கு மேற்படி டிரைவிங் ஸ்கூல் சென்றபோது அங்கு ஆஜரில் இருந்த உரிமையாளர் ரியாசுதீன் என்பவரை விசாரிக்க, தனது டிரைவிங் ஸ்கூலின் பதிவு எண்.2498882 என்றும், 18.02.2025ம்

தேதி புதிப்பித்ததாகவும், அவரது ஜீபே எண் 9488523444 மற்றும் 9597326976 என்றும், தனது அலுவலக அலைபேசி எண் 9442182628 என்றும் கூறினார். மேலும் அவர் தனக்கு பரமக்குடி SBI கிளை வங்கி கணக்கு எண்.10747811370 என்றும் கூறினார். மேற்படி அவர் சொன்ன ஜீபே விவரங்களை ஆய்வு செய்ததில் ரியாசுதீன் ஜீபேயிலிருந்து 8778079763 என்ற ஹரிவர்த்தன தங்கராஜ் என்ற எண்ணிற்கு ஜீபே பரிவர்த்தனை நடைபெற்றது சம்மந்தமாக மேற்படி அலைபேசி எண் குறித்து கேட்க. மோட்டார் வாகன ஆய்வாளர் கொடுத்த எண் என்று கூறினார். மேற்படி விபரம் பின்னர் மகஜரில் தொடர் விசாரணைக்காக குறிக்கப்பட்டது. மேற்படி ஹமீதியா டிரைவிங் ஸ்கூலில் நடத்தப்பட்ட சோதனையானது 16.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் அதனைத்தொடர்ந்து அங்கிருந்து கிளம்பி பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தினை அரசு சாட்சி முன்னிலையில் 16.45 மணிக்கு அந்த அலுவலகத்தில் ஆஜரில் இருந்த கண்காணிப்பாளர் திரு.பாலசுந்தரம் என்பவரிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு சோதனை செய்ய, மேற்படி நபரிடம் பணம் ஏதும் இல்லை. மேலும் தான் 9443652647 என்ற அலைபேசி எண்ணை பயன்படுத்தி வருவதாகவும், ஜீபே ஏதும் இல்லையென்றும், தனக்கு இராமநாதபுரம் SBI கிளை வங்கி கணக்கு எண்.10776908720 உள்ளது என்றும் கூறினார். பின்னர் மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த இளநிலை உதவியாளர் திருமதி.கிருஷ்ணபிரியா என்பவரிடம் பணம் ஏதும் இருக்கிறதா என்று கேட்க, அவ்வாறு பணம் ஏதும் இல்லையென்று கூறினார். மேலும் தனது அலைபேசி எண் 9043974996 என்ற அலைபேசி எண்ணை பயன்படுத்தி வருவதாகவும், ஜீபே ஏதும் இல்லையென்றும், தனக்கு பார்த்திபனூர் SBI கிளை வங்கி கணக்கு எண்.30858191450 உள்ளது என்றும் கூறினார். மேலும் அவ்வலுவலகத்தில் ஆஜரில் இருந்த தற்காலிக பணியாளர் திருமதி.பிரதீபா என்பவரிடம் பணம் ஏதும் இருக்கிறதா என்று கேட்க, அவ்வாறு பணம் ஏதும் இல்லையென்று கூறினார். மேலும் தனது அலைபேசி எண் 7094128299 என்ற அலைபேசி எண்ணை பயன்படுத்தி வருவதாகவும், மேற்படி எண்ணில் ஜீபே இருப்பதாகவும், தனக்கு பரமக்குடி இந்தியன் வங்கி கிளை கணக்கு எண்.6565166694 ம், பரமக்குடி கனரா வங்கி கிளை கணக்கு எண்.091910108607 5ம், பரமக்குடி பஞ்சாப் நேஷனல் வங்கியிலும் வங்கி கணக்கு உள்ளதாக கூறினார். மேற்படி நபர்களை விசாரணை செய்து அதன் விபரங்கள் குறிக்கப்பட்டது. மேற்படி பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக சோதனையானது 17.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அதன்பிறகு அங்கிருந்து கிளம்பி ஏற்கனவே கோகுலம் டிரைவிங் ஸ்கூலில் பணிபுரியும் திரு.சுப்ரமணியன்

என்பவர் வைத்திருந்த ஆவணங்கள் பற்றி விசாரித்ததின் அடிப்படையில், மேற்படி ஆவணங்களை டிரைவிங் ஸ்கூல் நடத்தி வரும் வாசுதேவராஜ் என்பவர் கொடுத்து அனுப்பியதாக கூறியதன்பேரில் மேற்படி டிரைவிங் ஸ்கூலில் சந்தேககத்திற்கு இடமான ஆவணங்கள் இருக்கும் என்பதன் அடிப்படையில் அரசு சாட்சி முன்னிலையில் 17.35 மணிக்கு பரமக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ள மேற்படி டிரைவிங் ஸ்கூல் சென்றபோது அங்கு ஆஜரில் இருந்த உரிமையாளர் வாசுதேவராஜா என்பவரை விசாரிக்க, அவரது அலைபேசி எண் 9443301097 மற்றும் 6383366220 என்றும், மேற்படி எண்களில் ஜீபே இல்லையென்றும், தனது மனைவியின் அலைபேசி எண் 9789386405 என்றும், மேற்படி எண்ணிற்கு ஜீபே உள்ளதாகவும், தனக்கு பரமக்குடி SBI கிளை வங்கி கணக்கு எண்.35116377478 மற்றும் இராமநாதபுரம் SBI கிளை வங்கி கணக்கு எண்.37797346437 இருப்பதாகவும் கூறினார். மேற்படி கோகுலம் டிரைவிங் ஸ்கூலில் நடத்தப்பட்ட சோதனையானது 18.15 மணிக்கு முடிக்கப்பட்டு மீண்டும் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 18.30 மணிக்கு வரப்பட்டது. அதனைத்தொடர்ந்து அங்கே காத்திருந்த திரு.அங்கமுத்து, வயது 28/2026, த/பெ ஆறுமுகம், பணியாளர், நாகராஜ் டிரைவிங் ஸ்கூல் என்பவரது சம்மதத்துடன் அவரது அலைபேசியின் ஜீபேயினை (6374991508) ஆய்வு செய்ததில், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களின் மகன் (8778079763) மற்றும் மகள் (9487959557) ஆகியோரின் பெயரில் உள்ள ஜீபே கணக்கிற்கு கணிசமான தொகை பல நபர்களிடமிருந்து பெற்று அனுப்பியுள்ள விபரம் தெரிய வந்தது. அது குறித்து அவரிடம் விசாரித்தபோது, வழக்கமான மாமூல் தொகையை வசூலித்து சில நேரங்களில் கையிலும், சில நேரங்களில் ஜீபே மூலமாகவும் அவர் கூறும் வங்கி கணக்கிற்கு செலுத்துவேன் எனக்கூறினார். அதனைத்தொடர்ந்து அங்கே காத்திருந்த திரு.சிக்கந்தர் அஸ்லாம், வயது 33/2026, த/பெ அப்துல்கனி, பணியாளர், முத்து டிரைவிங் ஸ்கூல் என்பவரது சம்மதத்துடன் அவரது அலைபேசியின் ஜீபேயினை (9789309233) ஆய்வு செய்ததில், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களின் மகள் ஹர்ஷினி பெயரில் உள்ள ஜீபே கணக்கிற்கு (9487959557) கணிசமான தொகை பல நபர்களிடமிருந்து பெற்று அனுப்பியுள்ள விபரம் தெரிய வந்தது. அது குறித்து அவரிடம் விசாரித்தபோது, வழக்கமான மாமூல் தொகையை வசூலித்து சில நேரங்களில் கையிலும், சில நேரங்களில் ஜீபே மூலமாகவும் அவர் கூறும் வங்கி கணக்கிற்கு செலுத்துவேன் எனக்கூறினார். இந்நிலையில் பொதுமக்கள் தொடர்ந்து காத்திருந்ததால் அவர்களின் வாகனங்களை ஆய்வு செய்வதற்காக மோட்டார்

வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் அவர்களை பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து ஆய்வு செய்யும் இடத்திற்கு வழக்கமான பணியை செய்ய தற்காலிகமாக அனுப்பப்பட்டது. அதன்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தங்கராஜ் ஆய்வு செய்துவிட்டு 20.00 மணிக்கு மீண்டும் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் வந்தடைந்தார். அதனைத்தொடர்ந்து இன்று 18.06.2026ம் தேதி 12.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட திடீர் சோதனை அறிக்கையானது 19.06.2026ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சோதனையில் கணக்கு காட்ட இயலாத பணம் மொத்தம் ரூ.1,92,650/- அரசு சாட்சி முன்னிலையில் கைப்பற்றினேன். மேற்படி திடீர் சோதனையின்போது சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே, இந்த சோதனையின் அடிப்படையில் 1) திரு.ம.தங்கராஜ், வயது 59/2026, த/பெ.மன்னாதன், மோட்டார் வாகன ஆய்வாளர், இராமநாதபுரம் (பொ) பரமக்குடி, 2).திரு.திலீப்குமார், வயது 29/2026, த/பெ சவுந்திரபாண்டியன், Registration Staff, PON SUZUKI, இராமநாதபுரம். 3) திரு.கதிரவன், வயது 32/2026, த/பெ மாரி, மேனேஜர், கணபதி செட்டியார் CBSE பள்ளி. 4) திரு.முகம்மது ஜமீல் ராஜா, வயது 33/2026, த/பெ நூர் முகம்மது, உரிமையாளர், Friends டிரைவிங் ஸ்கூல், பார்த்திபனூர். 5) திரு.அப்துல் ரகுமான், வயது 37/2026, த/பெ சாகுல் ஹமீது, பயிற்றுநர், கனி டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி. 6).திரு.தட்சிணாமூர்த்தி, வயது 39/2026, த/பெ முனியசாமி, பணியாளர், ஹமீதியா டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி. 7) திரு.தனபாலன், வயது 52/2026, த/பெ ராஜேந்திரன், புரோக்கர். 8) திரு.வேல்முருகன், வயது 37/2026, த/பெ சந்திரன், ஏஜெண்ட், சோழா இன்சூரன்ஸ், பரமக்குடி. 9) திரு.கமல்ராஜ், வயது 33/2026, த/பெ மாணிக்கம், சேல்ஸ்மேன், பஜாஜ் டுவீலர் கம்பெனி, பரமக்குடி. 10) திரு.ராஜா, வயது 41/2026, த/பெ காந்தி, உரிமையாளர், முத்து டிரைவிங் ஸ்கூல், கமுதி. 11) திரு.பிரசாந்த், வயது 33/2026, த/பெ ராஜேந்திரன், Registration Staff, RK Motors, Bajaj Auto Dealer, இராமநாதபுரம். 12) திரு.உமேஷ், வயது 24/2026, த/பெ.சண்முகவேலு, பணியாளர், இ சேவை மையம், RTO ஆபீஸ் அருகில், பரமக்குடி. 13).திரு.அங்கமுத்து, வயது 28/2026, த/பெ ஆறுமுகம், பணியாளர், நாகராஜ் டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி. 14) திரு.சிக்கந்தர் அஸ்லாம், வயது 33/2026, த/பெ அப்துல்கனி, பணியாளர், முத்து டிரைவிங் ஸ்கூல், கமுதி மற்றும் 15) திரு.ரியாசுதீன், உரிமையாளர், ஹமீதியா டிரைவிங் ஸ்கூல், பரமக்குடி ஆகியோர்கள் முறைகேடான செயல்களில் ஈடுபட்டதற்கான முகாந்திரம் இருப்பது தெரிய வருகிறது. எனவே, மேற்கண்ட நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு மேற்படி திடீர் சோதனையின் போது

கைப்பற்றப்பட்ட கணக்கில் காட்ட இயலாத மொத்தப் பணம் ரூபாய் 1,92,650/-, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் திடீர் சோதனை சம்மந்தமான எனது அறிக்கை ஆகியவற்றை உடனடியாக வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம்) மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். 19.06.2026. மேலும், உயர் அதிகாரிகளின் வாய்மொழி ஒப்புதல் பெற்று மேற்படி எதிரிகள் மீது இன்று 19.06.2026ம் தேதி காலை 07.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 04/2026 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் அசல், எதிரிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

19/06/2026.

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.